குற்றவியல் நீதித்துறை நடுவர், விரைவு நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திரு.S.சதாம்உசேன், B.A., L.L.B.
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், ஓமலூர்
எஸ்.டி.சி..எண் 69/2021

எ.ம.சா. 1

2025–ம் ஆண்டு ஜீலை மாதம் 02–ம் தேதி வியாழன் கிழமை எதிர் மனுதாரர் தரப்பு சாட்சி 01–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) செல்வி.இந்துமதி என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜெயராமன் | தொழில் | |
| தந்தை பெயர் | பூமாலை | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: காலை 12.12 மணி,

Complainant Sakthivel present. Advocate Mr.P.Kathiravan present for Complainant. Accused Jayaraman present. Advocate Mr.Thailappan present for Accused.

**எதிரி தரப்பு முதல் விசாரணை :**

1. புகார் தாரர் என் மீது பொய்யான காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்துள்ளார். நான் ஓய்வு பெற்ற சிறப்பு காவல் உதவி ஆய்வாளர். கடந்த 2016 ம் வருடம் ஜீன் மாதம் ரூ.1,00,000/– கடனாக பெற்றுக் கொண்டு காசோலை எண் 794476 கொண்ட ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா சீரங்கபாளையம் சேலம்–07, வங்கி கணக்கு எண் 10594064473 இதற்காக கொடுக்கப்பட்ட மேற்படி காசோலையை புகார்தாரர் சக்திவேலுக்கு கொடுத்தேன். மேற்படி காசோலையை புகார்தாரர் கேட்டுக் கொண்டதன் படி தேதி தொகை உட்பட எதையும் பூர்த்தி செய்யாமல் காசோலையை கொடுத்தேன்.

2. கடந்த 2018 ம் வருடம் மே மாதம் பணி ஓய்வு பெற்றதின் மூலம் பணி ஓய்வு பணத்தில் இருந்து 19.09.2018 ம் தேதி காசோலை எண் 119432 அதன் மூலம் ரூ.50,000/– சக்திவேலின் வங்கி கணக்கிற்கு செலுத்தினேன். அப்பணம் சென்று அடையாததால் அன்றைய தினமே நேரில் சென்று பணமாக கொடுத்தேன். அதன் பின்பு 24.09.2018 ம் தேதி காசோலை எண் 119434 அதன் மூலம் ரூ.50,000/– சக்திவேலின் வங்கி கணக்கிற்கு செலுத்தியுள்ளேன். ஆக மொத்தம் மேற்படி இரண்டு தேதிகளிலும் ரூ.1,00,000/–ம் செலுத்தி விட்டேன். அதற்கான வங்கி விபரத்தை ஆவணமாக தாக்கல் செய்கிறேன். **மேற்படி ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கி கணக்கு பட்டியல் எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. மேற்படி ரூ.1,00,000/– செலத்துவதற்கு முன்பே அதற்கான வட்டியையும் செலுத்திவிட்டேன். புகார்தாரருக்கு கொடுக்க வேண்டிய மொத்த தொகையை

செலுத்திய பின்பு நான் அவரிடம் கொடுத்த காசோலையை திரும்ப கேட்டேன், அவர் தேடி எடுத்து தருவதாக கூறினார். பிறகு காசோலையை தேடினேன், கிடைக்கவில்லை என்று கூறிவிட்டார். நானும் தெரிந்தவர் என்று விட்டுவிட்டேன். மேற்படி காசோலை பூர்த்தி செய்யப்படாத காசோலை என்பதால் வேறு நபர்கள் மூலம் பயன்படுத்த வாய்ப்பு இருப்பதாக எண்ணி புகார்தாரரிடம் தெரிவித்தேன். புகார் தாரர் என்னிடம் உங்களுக்கு சந்தேகம் இருந்தால் உங்கள் வங்கியிடம் Stop payment கொடுத்துவிடுமாறு தெரிவித்தார்.

4. மேற்படி காசோலையை எனது வங்கி கணக்கிற்கு செலுத்தும் பட்சத்தில் அதை ஏற்றுக் கொள்ளாமல் நிராகரிக்கும் படி 2019 ம் ஆண்டு 9 வது மாதம் இறுதியில் வங்கிக்கு மனு கொடுத்து இருந்தேன். **மேற்படி மனு எ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேற்படி மனு கொடுத்த பின்பு எனது காசோலையை எனக்கு திருப்பிதராமல் புகார்தாரர் விருப்பப்படி தேதி மற்றும் தொகையை பூர்த்தி செய்து ரூ.3,00,000/- கொடுக்க வேண்டும் என பொய்யான தகவலை கூறி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். நான் எனது வங்கிக்கு Stop payment கொடுத்தற்கான ஆவணத்தை தகவல் பெறும் உரிமை சட்டத்தின் படி பெற்று இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். **மேற்படி ஆவணம் எ.ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

5. புகார்தாரர் வழக்கறிஞர் மூலமாக 05.02.2021 ம் தேதியிட்ட வழக்கறிஞர் சட்ட அறிவிப்பு அனுப்பி இருந்தார். நான் 10.09.2018, 24.09.2018 ஆகிய இரண்டு தேதிகளிலும் புகார்தாரருக்கு கொடுக்கவேண்டிய ரூ.1,00,000/- ஐ கொடுத்துவிட்டேன். புகார்தாரர் காசோலை தொலைந்து போன போது நான் உங்கள் மீது வழக்கு ஏதும் தாக்கல் செய்ய மாட்டேன் என்றும் மேற்படி காசோலை கிடைக்கவில்லை என்றும் கூறினார். மேற்படி காசோலை வங்கியில் செலுத்தும் பட்சத்தில் அதை நிராகரிக்கும் படி மனு கொடுத்துவிட்டதால், பதில் சட்டஅறிவிப்பு கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்படாததால் பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை.

6. புகார்தாரருக்கு காசோலையை கொடுக்கும் முன்பே அவர் ரூ.2,50,000/- பெற்றுக் கொண்டதாகவும் அதற்கு கடனுறுதி சீட்டு சாட்சிகள் முன்னிலையில் பெற்றுக் கொண்டதாக பொய்யான தகவலை கூறியுள்ளார். அவ்வாறு நான் பெற்றுக் கொண்டு இருந்தால் கடனுறுதி சீட்டை இந்த வழக்கில் தாக்கல் செய்து இருப்பார். ஆனால் அவர் செய்யவில்லை. நான் மேற்படி புகார்தாரரிடம் இருந்து சாட்சிகள் முன்னிலையில் ரூ.2,50,000/- கடனாக பெறவில்லை, அவ்வாறான கடனுறுதி சீட்டும் எழுதி கொடுக்கவில்லை. அவ்வாறு நான் கொடுத்து இருந்தால் சாட்சிகள் மூலம் புகார்தாரர் நிரூபிக்க கடமை பெற்றவர் ஆவார்.

7. நான் கடந்த 2016 ம் ஆண்டு கொடுத்த மேற்படி காசோலை 794476 காசோலையை பயன்படுத்தி அவர் விருப்பத்திற்கு தேதி தொகையை பூர்த்தி

செய்து பொய்யான தகவலை கொடுத்துள்ளார். மேற்படி பொய்யான தகவலை கொடுத்துள்ள புகார்தாரர் குற்றம் புரிந்துள்ளார். எனவே இந்த நீதிமன்றம் பொய்யாக தாக்கல் செய்த இவ்வழக்கை தள்ளுபடி செய்யுமாறு வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

**புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை :**

8. எனக்கு தமிழ் ஆங்கிலம் எழுத படிக்க தெரியும். நான் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். இவ்வழக்கின் காசோலை எனது வங்கி கணக்கில் இருந்து கொடுக்கப்பட்டது. மேற்படி காசோலையில் உள்ள கையெழுத்து மட்டும் என்னுடையது, நான் பூர்த்தி செய்யவில்லை. நான் புகார்தாரரிடம் இருந்து கடன் வாங்கியதை ஒப்புக் கொண்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி கடனுக்காக இவ்வழக்கு காசோலையை கொடுத்துள்ளேன் என்றால் சரிதான்.

9. கடந்த 2016 ம் வருடம் புகார்தாரரிடம் இருந்து கடன் பெற்றதற்காக காசோலையை கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். புகார்தாரரிடம் 19.09.2018 ம் தேதி அன்று மாலை 05.00 மணியளவில் ரூ.50,000/– ஐ ரொக்கமாக கொடுத்தேன். 19.09.2018 ம் தேதி வங்கி மூலம் பணப்பரிவர்த்தனை சென்று அடையாததால் நேரில் சென்று ரொக்கமாக கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் எ.ம.சா.ஆ–1 ல் 19.09.2018 ம் தேதி அன்று புகார்தாரருக்கு பணம் செலுத்தியுள்ளது குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் சரி, புகார்தாரரின் வங்கி கணக்கிற்கு செல்லாமல் பணம் திருப்பப்பட்டதாகவும் இருக்கிறதா என்றால் சரிதான்.

10. நான் புகார்தாரரிடம் ரொக்கமாக ரூ.50,000/– கொடுத்ததற்கு ஆவணம் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி ரூ.50,000/– ஐ செலுத்திய போது புகார்தாரரிடம் இருந்து ரசீது பெற்றிருக்க முடியுமா என்றால் பைனான்ஸ் தொழில் செய்பவர் ரசீது கொடுக்க மாட்டார்கள். பைனான்ஸ் தொழில் செய்பவர்கள் ரசீது கொடுக்கமாட்டார்கள் என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும் பொதுவாக செலுத்திய பணத்திற்கு ரசீது கொடுப்பார்கள் என்றாலும் அவ்வாறு பணத்தை நீங்கள் தராததால் தான் உங்களால் எவ்வித ஆவணமும் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியவில்லை என்றால் சரியல்ல.

11. மேற்படி ரூ.50,000/– ஐ கொடுத்தற்கு சாட்சிகள் ஏதும் இல்லை. இவ்வழக்கின் விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் புகார்தாரருக்கு வட்டி செலுத்தியதாக சொல்லியுள்ள நிலையில் அதற்கு சான்றாக ஆவணம் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் மாதம் மாதம் ரொக்கமாக செலுத்தியதால் ஆவணம் ஏதும் இல்லை. நான் 24.09.2018 ம் தேதி ரூ.50,000/– ஐ செலுத்தியதன் மூலம் மொத்த கடனையும் செலுத்திவிட்டதாக

சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் மொத்த கடனையும் செலுத்திவிட்டு காசோலையை திருப்பி கேட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

12. நான் காசோலையை திருப்பி கேட்ட போது புகார்தாரர் மற்ற ஆவணங்களுடன் கலந்துவிட்டதாக கூறினாரா என்றால் சரிதான், தொலைந்துவிட்டதாகவும் கூறினார். மேற்படி புகார்தாரர் காசோலை தொலைந்துவிட்டதாக கூறிய பின்பு அவரிடம் இருந்து எழுத்து மூலமாக எழுதி கொடுக்க கேட்டேன் என்றால் சரி, அவ்வாறு எழுத்துமூலமா புகார்தாரர் எழுதி கொடுக்கவில்லை என்றாலும் எந்த வழக்கும் தாக்கல் செய்ய மாட்டேன் என்று உறுதி கூறினார். கடன் தொகையை முழுவதுமாக செலுத்தியதற்கு ஆதாரமாக ரசீது ஏதும் பெற்றுள்ளேனா என்றால் வங்கி கணக்கு பட்டியல் ஆதாரமாக இருப்பதால் அவ்வாறு ரசீது பெறவில்லை.

13. நான் சொல்வது போல் புகார்தாரரிடம் கடன் தொகையை திருப்பி செலுத்தி இருந்தால் ரசீது பெற்று இருப்பேன் என்றாலும் அதை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்து இருப்பேன் என்றாலும் சரியல்ல. புகார்தாரர் ரசீது மற்றும் காசோலை தரமறுத்த நிலையில் அவருக்கு எதிராக காவல் நிலையத்தில் புகார் தாக்கல் செய்துள்ளேன் என்றால் Online ல் புகார் அளித்தேன். மேற்படி புகார் அளித்ததற்கு சான்றாக ஆவணம் ஏதும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. புகார்தாரருக்கு கடனை திருப்பி செலுத்தியதாகவும், காசோலையை திருப்பி கொடுக்காததால் வழக்கறிஞர் அறிவிப்பு ஏதும் அனுப்பவில்லை.

14. என்னிடம் காட்டப்படும் எ.ம.சா.ஆ.2 ல் வங்கியிடம் காசோலை புத்தகம் காணாமல் போய்விட்டதாக மனு அளித்திருக்கிறேன் என்றால் சரி தான். எனது கைவசம் இருந்த காசோலை புத்தகம் காணாமல் போனதாக தான் மனு அளித்திருக்கிறேன் என்றால் சரி. காசோலை எண் 794476 தொலைந்துவிட்டதாக 30.09.2019 ம் அன்று மனு அளித்திருந்தேன் என்றால் நான் 27.09.2019 ம் தேதி அன்று மனு அளித்துவிட்டேன், வங்கிக்கு கிடைத்தது 30.09.2019 ம் தேதி. என்னுடைய முதல் விசாரணையிலும், புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்த போதும் வழக்கு காசோலையை 2016 ம் வருடம் கொடுத்ததாக சொல்லியிருக்கேன் என்றால் சரி.

15. 2016 ம் வருடம் காசோலையை புகார் தாரரிடம் கொடுத்ததாக சொல்லியுள்ள நிலையில் 2019 ம் வருடம் காசோலை எனது கையில் இருக்க வாய்ப்பு இல்லை என்றால் சரிதான். 2016 ம் வருடம் காசோலையை புகார் தாரரிடம் கொடுத்ததாக சொல்லியும் எ.ம.சா.ஆ.3 ல் 2019 ம் வருடம் எனது கையில் இருந்த காசோலை தொலைந்துவிட்டதாக மனு அளித்திருப்பதால் முன்னுக்கு பின் முரணான வாதங்களை சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் முன்னுக்கு பின் முரணான பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புகார்தாரரின் முதல்

நிலை வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை தெரிந்து கொண்டு அவரை குறுக்கு விசாரணை செய்ய எனது வழக்கறிஞருக்கு நான் தான் விபரங்களை சொன்னேன் என்றால் சரியல்ல. நான் எந்த விபரமும் எனது வழக்கறிஞரிடம் குறுக்கு விசாரணை செய்ய சொல்லவில்லை என்றால் சரிதான். எனது வழக்கறிஞர் அவரே படித்து பார்த்து புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்தார்.

16. என்னிடம் காட்டப்படும் இவ்வழக்கின் புகார்தாரரின் பிரமாண பத்திரிக்கையில் உள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி பிரமாண பத்திரிக்கையில் எதிரி என்னிடம் பலமுறை அவரது குடும்ப தேவைகளுக்காக வட்டிக்கு கடன் பெற்று திருப்பி கொடுத்துவந்தார் என்று சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல, ஒரே ஒரு முறை தான் வாங்கியுள்ளேன். இந்த சங்கதியை புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்த போது அல்லது எனது முதல் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. 24.09.2018 ம் தேதி எனது வங்கி கணக்கில் இருந்து புகார்தாரரின் வங்கிக்கு ரூ.50,000/- அனுப்பியதாக சொல்லியுள்ள நிலையில் அந்த பரிவர்த்தனை ஏற்கனவே வாங்கிய கடனுக்கானது என்றால் தற்போது வழக்கின் கடனுக்காக இல்லை என்றால் சரியல்ல.

17. நான் 06.03.2020 ம் தேதி வாங்கிய கடனை திருப்பி செலுத்தும் பொருட்டு இவ்வழக்கு காசோலையை கொடுத்துள்ளேன் என்றாலும் 2016 ம் ஆண்டு வாங்கிய கடனுக்காக இல்லை என்றாலும் சரியல்ல. புகார்தாரரின் சட்ட அறிவிப்பை பெற்றதின் பின், கடனை திருப்பி செலுத்திவிட்டதாகவும் காசோலையை புகார்தாரர் தொலைத்துவிட்டதாகவும் பதில் அறிவிப்பு ஏதும் அனுப்பவில்லை என்றால் சரிதான். காசோலை எண் 794476 புகார்தாரரிடம் கொடுத்து தொலைந்து போனதாக வங்கிக்கு அளித்த மனுவில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். உண்மையிலே புகார்தாரரிடம் கொடுத்த வழக்கு காசோலை தொலைந்து போய் இருந்தால் வங்கிக்கு அனுப்பிய மனுவில் குறிப்பிட்டு இருப்பேன் என்றாலும் பல நபர்களிடம் கடன் வாங்கி ஏமாற்றும் நோக்கத்தோடு பல காசோலைகள் காசோலை புத்தகத்தோடு காணாமல் போனதாக வங்கிக்கு அனுப்பிய மனுவில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

18. புகார்தாரரின் சட்ட அறிவிப்பு பெற்ற பின் காசோலையை புகார்தாரரிடம் இருந்து மீட்டு தரச் சொல்லி காவல் நிலையத்தில் புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான், நீதிமன்ற வழக்கு என்பதால் காவல் நிலையத்தை அணுகவில்லை. புகார்தாரர் இந்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்த பின்பு காவல் நிலையத்தில் புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான், நீதிமன்ற வழக்கு என்பதால் காவல் நிலையத்தை அணுகவில்லை. இவ்வழக்கு காசோலையை புகார்தாரரிடம் இருந்து மீட்டு தரவேண்டி ஏதேனும் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். புகார்தாரரிடம் இருந்து கடன் வாங்கி அதை திருப்பி செலுத்தும்

பொருட்டு இந்த வழக்கு காசோலையை புகார்தாரருக்கு கொடுத்துள்ளேன் என்றால் சரிதான்.

19. புகார்தாரரிடம் கடனை திருப்பி செலுத்தியதற்கு சான்றாக எந்த ஆவணமும் தாக்கல் செய்யாததால் புகார்தாரர் அவருடைய வழக்கை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்துள்ளார் என்றால் சரியல்ல. கடனை திருப்பி செலுத்தியுள்ளதாக கூறியுள்ள நிலையில் அதனை நிரூபிக்கும் கடமை என் மேல் இருப்பதால் அவ்வாறு நிரூபிக்க தவறிவிட்டேன் என்பதாலும் அதனால் குற்றம் புரிந்தவர் என்றாலும் சரியல்ல. நான் காசோலை மோசடி வழக்கிற்காக தண்டிக்கபடிவேண்டியவர் என்றால் சரியல்ல.

விசாரணை முடிந்த நேரம் மதியம் 01.31 மணி.

Sd/S.Sadhamhusain<br>
Judicial Magistrate,<br>
Fast Track Court,<br>
Omalur.